புத்தகம்-௩. 1907ஶு செப்டம்பர்மீ 15உ இலக்கம்-௧௬.

## சுகாதார போதினி.

க-ம், பிரிவு.

### வைத்தியக் குறிப்புகள்

முன்தொடர்ச்சி (Vol-III. பக்கம் 115.)

### இரைப்பை சம்பந்தமான வியாதிகளின் சிகிச்சை.

### கடுக்காய் மாத்திரை.

பிஞ்சுக் கடுக்காய்ச் சூரணம் பலம்-உ, கிச்சிலிக் கிழங்குச் சூரணம், சோம்புச் சூரணம் இவை வகைக்குப் பலம்-க, பொரித்த வெண்காரச் சூரணம் பலம்-௨.

செய்முறை:—மேற்படி சூரணங்களைக் கல்வத்திலிட்டு குளிர்ந்த ஜலம்வார்த்து இரண்டு சாமநேர மரைத்து அரை விராகனெடை டையுள்ள மாத்திரைகளாகச் செய்துவைத்துக் கொள்ளவும்.

பிரமாணம்:—பெரியவர்களுக்கு இரண்டு மூன்று, பாலர்களுக்கு ஒன்று ஒன்றரை.

அனுபானம்:—சீனிசர்க்கரை, வெல்லம், வெந்நீர், பன்னீர், மூலைப்பால் முதலியவைகளாம்.

உபயோகம்:—மலபந்தம், மலச்சிக்கல் ஆகியவைகளை நீக்கி மலத்தைக் கிரமப்படுத்தும். இரைப்பையிலுள்ள வாயு, கபக்கட்டு, குளிர்ச்சி ஆகியவைகளை நீக்கி இரைப்பையைக் கிரமப்படுத்தி அதனைப் பலப்படுத்தும்.

### குறிப்பு.

இந்த மாத்திரையானது பால்குடிக்கும் குழந்தைகளுக்கு அதிகமா யுபயோகப்படத் தக்கது. இதனை வாரத்தில் இரண்டு மூன்று தடவை அல்லது ஒன்றை விட்டொருநாள் பால்குடிக்கும் குழந்தைகளுக்கு உபயோகித்து வருவதினால் வயிற்றில் பாற்கட்டு, வாயுக்கட்டு, புளிப்பு முதலியவைகள் சேராமல் இரைப்பையைச் சுத்திசெய்து நல்ல சுகத்தைக் கொடுக்கும்.

### இலவணாதி மாத்திரை.

லாகூருப்பு, இந்துப்பு, கடப்பைக்காரம், கறுப்புப்பு, சோடாவுப்பு, மஞ்சட் கடுக்காய்த்தோற் சூரணம், தான்றிக்காய்த்தோற் சூரணம், நெல்லிமுள்ளிச் சூரணம், சோம்புச் சூரணம், ஓமச் சூரணம் இவை வகை-க-க்கு விராகனெடை-க, கருஞ்சீரகச் சூரணம், நற்சீரகச் சூரணம், கொடிவேலி வேர்ப்பட்டைச் சூரணம், மேற்றோலைச் சீவிப்பிடித்த சுக்குச் சூரணம், மிளகுச் சூரணம், அரிசித்திப்பிலிச் சூரணம், பொரித்த வெண்காரச் சூரணம், நவச்சாரம், குச்சிகாம்பு முதலியவை நீக்கின சூரத்துநில ஆவாரைச் சூரணம் இவை வகை-க-க்கு விராகனெடை-க௨, பொரித்த பெருங்காயச் சூரணம், விராகனெடை-வ, எலுமிச்சம் பழச்சாறு படி-வ.

செய்முறை:—உப்புகளையெல்லாஞ் சேர்த்துப் பொடித்து மற்ற சூரணங்களையுஞ் சேர்த்துச் சற்றுநேர மரைத்துக் கலந்து எலுமிச்சம் பழச்சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து அரைத்து சாறெல்லாஞ் சுண்டினபின்பு திரள்பதத்தில் கால் விராகனெடையுள்ள மாத்திரைகளாகச் செய்து நிழலிலுலர்த்தி வைத்துக் கொள்ளவேண்டும்.

பிரமாணம்:—மாத்திரை-க. உ.

உபயோகம்:—வாயுக்களைச் செம்மையாகக்கண்டிக்கும். உட்கொண்ட ஆகாரத்தைச் சீரணிக்கச்செய்யும். அஜீரணபேதி, மந்தபேதி ஆகியவைகளைக் கண்டிக்கும், இரைப்பையிலுள்ள தோஷங்களைநீக்கி அதைப்பலப்படுத்தும்.

### குறிப்பு.

இதனை ஆகாரம் சாப்பிட்டபின்பும் சாப்பிடலாம். காலைமாலை யிரண்டு வேளையும் உபயோகிக்கலாம். அவசியமான மற்ற நேரங்களிலும் உபயோகித்துக் கொள்ளலாம்.

### இங்குவாதி மாத்திரை.

உயர்தரமான பெருங்காயம், மஞ்சட் கடுக்காய்த்தோற் சூரணம், மேற்றோலைச் சீவிப்பிடித்த சுக்குச் சூரணம், கறுப்புப்பு, வாய்விளங்கச் சூரணம், கொடிவேலி வேர்ப்பட்டைச் சூரணம், இவை வகை க-க்குப் பலம்-உ, பனைவெல்லம் பலம்-உ0.

செய்முறை:—பெருங்காயத்தைப் பொரித்துச் சூரணித்து மற்றச் சூரணங்களையுஞ் சேர்த்து மைப்போலரைத்துக்கொள்ளவும். வெல்லத்தைக் கொஞ்சம் ஜலத்திற்கரைத்து அடுப்பேற்றிக் கொதிக்கவைத்து ஒருகொதி வந்தவுடன் வடிகட்டித் திப்பிமுதலியவைகளை நீக்கி மறபடியும் அடுப்பேற்றிக்காய்ச்சி கெட்டிப் பாகுபதத்தில் இறக்கிவைத்துக் கொண்டு முன் சூரணத்திற் சேர்த்து ஒருமணிநேர மரைத்துப் பீங்கான் பாத்திரத்திற் பத்திரப்படுத்த வேண்டும்.

பிரமாணம்:—விராகனெடை-கவ, க௨. இதனைக் காலையி லொருவேளை யுட்கொண்டு அதன்மேற் கொஞ்சம் வெந்நீரைப் பானஞ்செய்ய வேண்டும்.

உபயோகம்:—இரைப்பையிலுள்ள வாயுக்கள், வயிற்றிரைச்சல், வயிற்றுப் பொருமல், வயிற்றிலுண்

டாகுஞ் சத்தம், வாயு சம்பந்தமான குன்மரோகம், கபசம்பந்தமான குன்மரோகம் ஆகியவைகள் தீரும்.

### இலவணாதிச் சூரணம்.

கருப்புப்பு பலம்-௫, மேற்றோல் சீவியிடித்த சுக்குச் சூரணம் விராகனெடை - ௧௨, ஓமச் சூரணம், கொடிவேலி வேர்ப்பட்டைச் சூரணம், இவை வகை-௧-க்கு விராகனெடை-௭, அரிசித்திப்பிலிச் சூரணம், மஞ்சட் கடுக்காய்த்தோற் சூரணம், இவை வகை-௧-க்கு விராகனெடை-௨, எலுமிச்சம் பழச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை:—எல்லாவற்றையுங் கல்வத்திலிட்டு எலுமிச்சம் பழச்சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து ஒருசாம நேரமரைத்து வெயிலி லுலர்த்தவேண்டும். ஈரமில்லாமல் நன்று யுலர்ந்த பின்பு மறுபடியுங் கல்வத்திலிட்டுப் பொடித்து முன்போல் எலுமிச்சம்பழச்சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து ஒருசாம நேரமரைத்து முன்போல் வெயிலிலுலர்த்த வேண்டும். மூன்றுந் தடவையும் எலுமிச்சம் பழச்சாற்றினலரைத்து முன்போ லுலர்த்திப் பொடித்து சீஷாவிற் பத்திரப்படுத்தவும்.

### பசிதீபன உசிதமுறை.

மிளகாயை வெயிலிலுலர்த்திப் பொடித்த சூரணம் பலம்-௨௰, எலுமிச்சம் பழச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை:—மேற்படி சூரணத்தைக் கல்வத்திலிட்டு எலுமிச்சம் பழச்சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து ஒருசாம நேரமரைத்து வெயிலில் வைத்துலர்த்த வேண்டும். மறுநாள் காலையில் கல்வத்திலிட்டுப் பொடித்து முன்போல் எலுமிச்சம்பழச் சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து முன்போல் ஒருசாம நேரமரைத்து முன்போலுலர்த்த வேண்டும். இவ்விதம் மடக்கி மடக்கி அரைத்தும் உலர்த்தியும் நாற்பதுநாட்செய்து இரண்டு குன்றிமணி யெடையுள்ள மாத்திரைகளாகச் செய்து நிழலிலுலர்த்திப் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—மாத்திரை-௨. இதனை ஒரு வெற்றிலையில் வைத்து மென்று சாப்பிடவேண்டும்.

உபயோகம்:—அடங்காப் பசியை யுண்டாக்கும் தாம்பிர பற்பம் பாஷாண பற்பம், முதலியவைகளை உபயோகித்து அடங்காப் பசியுண்டாவது வழமை. நாம் தினந்தோறும் உபயோகித்து வரும் இந்தசொற்ப வஸ்துவை மேற்கண்ட விதமாகப் பக்குவப் படுத்துவதினல் மேற்படி ஆச்சரிய குணமுண்டாகி விடுவதால், ஒவ்வொன்றைரிம் அதனதன் கிரமப்படி பக்குவப்படுத்துவதின் விசேஷம் நன்குவிளங்கும்.

### குறிப்பு.

மேற்கண்ட விதமாக இதனை நாற்பதுநாள் அரைக்க சோம்பல் படுகிறவர்கள் குறைந்தபக்ஷம் ஒருவார மேனும் மேற்கண்ட விதமாகப் பக்குவப்படுத்தி உபயோகித்தால் அஜீரண ரோகம், மந்தாக்கினி ரோகம் முதலியவைகள் தீரும். விஷபேதிக்கு இதனை உபயோகித்துக் குணங்கண்டிருப்பதாக நமது நண்பர்களுள் ஒருவரால தெரிய வந்திருக்கிறது வாஸ்தவத்தில் அவ்வித குணமுண்டென்பதற்குச் சந்தேகமில்லை.

### வேறு.

மேற்றோல் சீவின சுக்குச் சூரணம் பலம் - ௧. சோம்புச் சூரணம் பலம்-௩, பெருங்காயம் பலம் - ௧௰, எலுமிச்சம் பழச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை:-கல்வத்திற் பெருங்காயத்தைப்போட்டு இடித்துத் தூள்செய்து மேற்படி சாறறைச் சிறுகச் சிறுக வார்த்து அரைத்து வெண்ணெய்போலான பின்பு மற்ற சூரணங்களையுஞ் சேர்த்து மேற்படி சாற்றையே சிறுகச் சிறுக வார்த்து இரண்டு சாம நேரமரைத்து ஒரு விராகனெடையுள்ள பில்லை மாத்திரைகளாகச்செய்து இரும்புச் சட்டியைக் கரிநெருப்பிற் சிவக்கக்காய்ச்சி அதன்மீது வைத்து பில்லைகள் சிவந்துபோன பக்குவத்தில் எடுத்துப் பொடித்துச் சீஷாவிற் பத்திரப்படுத்தி வைத்துக் கொள்ளவும்.

பிரமாணம்:—விராகனெடை-வ, ௰. இதனையுட்கொண்டு மேலே கொஞ்சம் வெந்நீர்பானஞ் செய்யவும்.

உபயோகம்:—இரைப்பையிலுள்ள வாயுக்கள், வயிற்றுப்பொருமல், வயிற்றிரைச்சல் முதலியவைகள் தீரும். வயிற்றுநோவு, மந்தாக்கினிரோகம், அஜீரணரோகம் முதலியதைகள் நீங்கும். மந்தபேதி, அஜீரணபேதி ஆகியவைகளுங் குணமாம். இரைப்பையின் அக்கிரமத்தை நீக்கிக் கிரமப்படுத்தி அதைப் பலப்படுத்தும்.

### ஓம மாத்திரை.

ஓமச்சூரணம் பலம்-௰, கருப்புப்பு பலம் - ௰, கையாந்தகரைச் சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை:—இவ்விரண்டையுங் கல்வத்திலிட்டு மேற்படிசாற்றைச் சிறுகச்சிறுக வார்த்து ஒருசாம நேரமரைத்துக் கால்விராகனெடையுள்ள மாத்திரைகளாகச்செய்து நிழலிலுலர்த்தி வைத்துக் கொள்ளவும்.

பிரமாணம்:—மாத்திரை-௨-௩. பாண்டுரோகிகளுக்கு கையாந்தகரைச்சாற்றி லனுபானித்துக் கொடுக்கலாம்,

உபயோகம்:—அஜீரண ரோகம், மந்தாக்கினி ரோகம் முதலியவைகள் தீர்ந்து ஜடாராக்கினி அதிகப்படும்.

(இன்னும் வரும்.)

---

சுகாதார போதினி.

௨-ம் பிரிவு.

குடும்ப வைத்தியம்

முன்தொடர்ச்சி (Vo - III - பக்கம்-116)

குவய்னு.

குளிர்சுரத்தின் முறையை நிறுத்துவதில் இதுமிகவுங் கைவல்யமானதும் மற்ற மருந்துகளைக் காட்டிலும் சீக்கிரம் குணஞ்செய்வதிலும் இதுமிகவும்பிரசித்திபானதுமாம் பிரதிதினமும்வருகிற குளிர்சுரம்அல்லது, மூன்றுநாளைக் கொருதரம் வருகிறமூன்றுமுறைசுரம் அல்லது நான்குநாளைக் கொருதடவை வரும் நான்காமுறைசுரம் முதலிய எல்லாவகைமுறை சுரங்களில் இது மிகவும் சிறந்த மருந்தென அனுபவத்தால் நிச்சயிக்கப்பட்டிருக்கிறது ஆனால், சுரமிருக்கும்போது அல்லது சுரம் வருவதற்கு முன்னுண்டாகும் கொட்டாவி, முறுக்குவிடுதல் ஆகியவைகள் ஆரம்பமானபோதும் இதனை உபயோகிக்கலாகாது. ஆனால் சுரமில்லாத சமயங்களில் ஒவ்வொன்று அல்லது, இரண்டிரண்டு குன்றிமணியெடை குவய்னுவை மும்மூன்றுமணிக் கொருதடவை உபயோகிக்கவேண்டியது. சுரமானது காலையில்வந்து பிற்பகலில் நின்றுவிடுகிறதாயிருந்தால் சுரம் நின்றபின்பு ஒவ்வொரு குன்றிமணியெடை குவய்னுவை இரண்டு அல்லது, மூன்றுதடவைகள் படுக்கைக்குப் போகிறவரையிற் கொடுத்து அதிகாலையிற் சுரம் வருவதற்குமுன் இரண்டரைக் குன்றிமணியெடை குவய்னுவை உபயோகிக்கவேண்டும். இப்படிச் செய்வதால் இரண்டொரு நாட்களில் சுரம் நின்றுபோகும். இவ்விதமே மூன்றுமுறை, நான்காமுறை சுரங்களிலும் செய்யவேண்டியது. அதாவது முறையில்லாத நாட்களில் ஒன்று அல்லது ஒன்றரைக் குன்றிமணியெடை குவய்னுவை மும்மூன்றுமணிக் கொருதடவை உபயோகித்துவந்து சுரம் வரும் முறைதினத்தின் அதிகாலையில் இரண்டுகுன்றிமணியெடை குவய்னுவைக்கொடுத்து சுரம்வர இரண்டுமணிக்கு முன்னும் இரண்டரைக் குன்றிமணியெடை குவய்னுவைக் கொடுக்கவேண்டும். இவ்விதம் செய்தால் சுரமானது அவசியம் நின்றுபோகும்.

(இன்னும் வரும்)

சுகாதார போதினி.

௩-ம் பிரிவு.

ஸ்திரீ வைத்தியம்.

முன்தொடர்ச்சி (Vo. III-பக்கம்-117.)

பெரும்பாட்டுப் பிரயோகம்.

ஓலைத் தாமரையிலை ரசம் பலம்-௧௰, சர்க்கரை பலம்-௨. இவ்விரண்டையும் கலக்கிப் பானஞ்செய்ய வேண்டும். இவ்விதம் காலைமாலை யிரண்டுவேளையும் சாப்பிட்டுவரப் பெரும்பாட்டிரத்தம் நிற்கும்.

வேறு.

மந்தாரப்பட்டை பலம்-௨, வெங்காயம் பலம்-௨, வெல்லம் பலம்-௨. இவை யெல்லாவற்றையுங் கல்வத்திலிட்டு மைபோலரைத்து ஆறு உருண்டைசெய்து காலை மாலை யிரண்டுவேளையுமாக மூன்றுநாட் சாப்பிடப் பெரும்பாடு நிற்கும்.

வேறு.

ஏலம் விராகனெடை-௧, படிக்காரம் விராகனெடை-௧. இவ்விரண்டையும் முள்ளங்கிச்சாறு விட்டரைத்து ஏழு உருண்டைசெய்து அரிசிக் கழுநீரிற்கலக்கிச் சாப்பிடவேண்டும். இவ்விதம் ஏழுநாட் காலையிற் சாப்பிடப் பெரும்பாடு நிற்கும்,

வேறு.

நாவல்பட்டையை யரைத்துவிழுது பலம்-௨, இதனை மோரிற்குழப்பிப் பானஞ்செய்ய வேண்டும். இவ்விதம் காலையில் மூன்றுநாள் பானஞ்செய்யப் பெரும்பாடு நிற்கும்.

வேறு

புளியைவேண்டிய அளவுகரைத்து அதில் துணியைநனைத்துக் காயவைக்க வேண்டும். ஈரமில்லாமல் உலர்ந்த பின்பு முன்போல் புளியைக்கரைத்து முன்போல் நனைத்து உலர்த்தவேண்டும். இவ்விதம் மடக்கி மடக்கி ஐந்துதடவைகள்செய்து அதனைக் கொளுத்திச் சாம்பலாக்கி அந்தச் சாம்பலுக்குச் சமனெடை பனைவெல்லத்தைச் சேர்த்தரைத்து சுமார் இரண்டு விராகனெடை சாப்பிட வேண்டும். இப்படி மூன்றுவேளை சாப்பிட்டால் பெரும்பாட்டிரத்தம் நிற்கும்.

வேறு லேகியம்.

கசகசாத்தோல், கர்க்கடகசிங்கி இவற்றின் சூரணம் வகை-௧-க்குப் பலம்-௧, மராட்டி மொக்குச்சூர

ணம் விராகனெடை-கவ, பனைவெல்லம் பலம்-உ, தேன் பலம்-௩.

செய்முறை:—வெல்லத்தைப் பாகுசெய்து பாகுபதத்தில் மேற்படி சூரணத்தைக் கொட்டிக் கிண்டிக்கிளறி இறக்கித் தேனைவிட்டு மிஸ்ரமித்து எடுத்துப்பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—விராகனெடை-க௩-உ. காலைமாலை இரண்டுவேளையும் ஐந்துநாட் சாப்பிடவும்.

உபயோகம்:—பெரும்பாடு தீரும்.

பத்தியம்:—வெந்நீர்ச்சாதம், வறுத்த துவரை ஆகியவைகளாம், மற்றதொன்று மாகாது.

### கெற்பஸ்திரீ நீர்ச்சுருக்கிற்கு.

சிறுநெருஞ்சிமுள், சீரகம் இவை வகை-க-க்குப் பலம்-க, சீனிச் சர்க்கரை பலம்-உ, முன் இரண்டு சரக்கையும் வறுத்து இடித்துச் சூரணித்து வஸ்திரகாயஞ்செய்து சீனியையுஞ் சேர்த்து வேளையொன்றிற்கு இரண்டு விராகனெடை வீதம் காலை மாலை யிரண்டு வேளையுஞ் சாப்பிட்டுவர மேற்படி ரோகந்தீரும்.

### கெற்பமுண்டாக வுசிதம்.

பொன்னுவாரைச்சாறுபலம்-க, பசுவின்பால் பலம்-ரூ. இவ்விரண்டையுஞ் சேர்த்துக் காலையிற் பானஞ்செய்ய வேண்டும். இவ்விதம் சூதக சுத்த ஸ்நானஞ்செய்தபின்பு ஏழுநாள் உபயோகிக்க கெற்பமுண்டாகும்.

### கெற்பத்தில் மரித்தபிண்டம் வெளிப்பட.

குங்குமப்பூ விராகனெடை-உ. (இதனை ஜலத்திலரைத்து உருண்டைசெய்து உள்ளுக்குக் கொடுக்க மறித்தபிண்டம் உடனே வெளிப்படும்.

### வேறு.

அரசங்கொழுந்து பலம்-உ, ஏலரிசி பலம்-௩. இவ்விரண்டையுமரைத்து ஒருபலம் வெண்ணெயிற் குழைத்துக்கொடுக்க அரைமணிநேரத்திற்குள் மரித்தபிண்டம் வெளிப்படும்.

### வேறு.

கார்த்திகைக் கிழங்கை அரைத்து அடிவயிற்றிற்பூசி அனல்காட்ட வயிற்றில் மரித்த பிண்டம் உடனே வெளிப்படும்.

(இன்னும் வரும்)

## சுகாதார போதினி.

௪-ம் பிரிவு

### பாலவைத்தியம்.

முன்தொடர்ச்சி (Vol. 3. பக்கம். 118).

### மாந்த எண்ணெய்.

(a) சிற்றாமணக் கெண்ணெய் படி-உ, துளசிச்சாறு, முசுமுசுக்கைச்சாறு, உத்தாமணிச்சாறு, சீந்திற் கொடிச்சாறு, தேள்கொடுக்கி யிலைச்சாறு, சிறுசெருப்படிச்சாறு, கையாந்தகரைச்சாறு, வல்லாரைச்சாறு, மணத்தக்காளிச்சாறு, நுணாவிலைச்சாறு, கஞ்சாங் கோரைச்சாறு, கொழிஞ்சி யிலைச்சாறு, வெள்ளறுகுச்சாறு, பிரமி யிலைச்சாறு இவை வகை-க-க்குப் படி-வ, சோற்றுக் கற்றாழைச்சாறு படி-௩, வரகு வைக்கோலைச் சுற்றி யெரித்து இடித்துப் பிழிந்த ஆற்றுத் தும்மட்டிக்கா யிலைச்சாறு படி-ளு.

(b) கருஞ்சீரகம், சீரகம், சன்ன லவங்கப்பட்டை, வெந்தயம், கோஷ்டம் இவை வகை-க-க்குப் பலம்-௩, செண்பகமொக்கு விராகனெடை-க. இவையெல்லாவற்றையும் சேர்த்திடித்து ௨-பலம் தோலுரித்த வெள்ளைப் பூண்டிதழைச் சேர்த்து அம்மியில் வைத்து ஜலம் வார்த்தரைத்து வெண்ணெய்போலெடுத்து வைத்துக் கொள்ளவும்.

செய்முறை:—(a) யி லுள்ளவைகளை யெல்லாம் ஒன்றாகக் கலந்து அடுப்பேற்றிச் சிறுதீயா யெரித்துச் சோற்றுப் பதமாய் வரும்போது (b) யிற் சொன்னபடி சித்தப்படுத்தி யிருப்பதைப் போட்டு நன்றாகக் கிளறிவிட்டு கடுகு திரள்பதத்தி லிறக்கி வடிகட்டிச் சீஷாவிற் பத்திரப்படுத்த வேண்டும்.

பிரமாணம்:—விராகனெடை-வ, ௩, ௬, க, கவக௩.

அனுபானம்:—முலைப்பால், சுக்குக் கஷாயம், ஓமக் கஷாயம், ஓமத் திராவகம், தேன் முதலியவைகளாம்.

உபயோகம்:—குழந்தைகளுக்குண்டாம் எல்லாவகை மாந்தரோகங்களும், அள்ளு முதலிய கபசம்பந்தமான ரோகங்களும் தீரும்.

காலையில் மாத்திரம் ஒருவேளை யெண்ணெயைக் கொடுக்க வேண்டும். மாலையிற் பின்காணும் கஷாயத்தை உபயோகிக்க வேண்டும். அது இது:—

ஒரு விராகனெடை மிளகை வறுத்துச் சாம்பலாக்கி அரையரை விராகனெடை துத்தியிலே, வெந்தயம் ஆகியவைகளையும் சேர்த்துச் சிவக்கவறுத்து-௩ ஆழாக்கு ஜலம்விட்டு-௨ ஆழாக்காகச் சுண்டவைத்து வடிகட்டிப் பானஞ் செய்விக்கவும். கஷாயம் சாப்பிடாதவர்களுக்கு வசம்பைச் சுட்டுச் சாம்பலாக்கித் தேனிலிழைத்துக் கொடுக்கவும்.

நாக்குப்பூச்சி யெண்ணெய்.

(a) சிற்றாமணக் கெண்ணெய் சேர்-௨, சதுரக் கள்ளிப்பால் சேர்-க, பசுவின்பால் சேர்-௭.

(b) கருஞ்சீரகம் பலம்-௨, கார்போகரிசி, வெட்பாலையரிசி, வசம்பு, தோலுரித்த வெள்ளைப்பூண்டிதழ் இவை வகை-க-க்குப் பலம்-௨, தோலுரித்த வெங்காயம் பலம்-௨.

செய்முறை:—(a) யி லுள்ளவைகளை யொன்றுகக் கலந்து அடுப்பேற்றிச் சிறுதீயா யெரித்து ஒரு கொதி வந்தவுடன். (b) யி லுள்ளவைகளை யெல்லாம் சேர்த்திடித்து அரைத்து அதிற்போட்டு எரித்துக் கடுகு திரள்பதத்தில் இறக்கி வடிகட்டி வைத்துக் கொள்ளவும்.

பிரமாணம்:—பெரியவர்களுக்கு விராகனெடை-க, சிறுவர்களுக்கு விராகனெடை-௨, ௭

அனுபானம்:—இளநீர், பால், சர்க்கரை, தேன் முதலியவைகளாம்.

பேதி அதிகமானால் மிளகுநீருஞ் சாதமுஞ் சாப்பிடப் பேதி நின்றுவிடும்.

உபயோகம்:—வயிற்றினுள்ள பழைய மலங்களெல்லாம் வெளிப்பட்டுப் போகும். பெரும்பூச்சிகள், சிறுபூச்சிகள், கிருமிகள், முதலிய எல்லாவகைப் பூச்சிகளும் வெளிப்பட்டுப் போகும்.

குளிர்ச்சி யெண்ணெய்.

சிற்றாமணக் கெண்ணெய் படி-௨, ஆவாரம்பூ விதழ் பலம்-௨௭, சோற்றுக் கற்றாழைச்சோறு பலம்-௫, வெண்ணிறமான வெங்காயச்சாறு வீசை-௭, வெந்தயம் பலம்-௩, கற்கண்டு பலம்-௨௭.

செய்முறை:—இவற்றுள் சரக்குகளைச் சிதைத்துப்போட்டுக் கற்றாழைச் சோற்றையும் சேர்த்து வெயிலில் பத்துநாள் வைத்துப் பிறகு எடுத்து உபயோகிக்க வேண்டும். நீரிருந்தால் இளஞ்சூட்டில் வைத்து நீரில்லாமல் எரித்துப் பத்திரப்படுத்திக்கொள்ளவேண்டும். வெயிலில் வைக்கக் கூடாத சமயங்களில் அடுப்பின்மீது வைத்து தீபாக்கினியாக எரித்துப் பத்திரப்படுத்திக் கொள்ளலாம்.

பிரமாணம்:—விராகனெடை-க. ௪.

உபயோகம்:—கணச்சூடு, அஸ்திச்சூடு, கெர்ப்பச்சூடு முதலியவைகள் தீர்ந்து தேகங்குளிர்ந்து நல்லபுஷ்டி யுண்டாகும். தேகம் செழிப்பாகும்.

(இன்னும் வரும்)

சுகாதார போதினி.

௫-ம் பிரிவு

மூலரோகம்

முன்தொடர்ச்சி (vol- III பக்கம்.120)

மூலரோகச் சிகிச்சை.

கொண்டைக்கடலை சுமார் பலம்-௧௩, இதனை இரவில் ஜலத்திற்போட்டு ஊறவைத்து மறுநாட் காலையில் அடுப்பேற்றி வேகவைக்க வேண்டும். தண்ணீரைச் செல்லத்தக்க அளவு சேர்த்துக் கொள்ளவும். அடுப்பை மெதுவாகவும் எரித்து வரவேண்டியது. கடலைப் பருப்பானது நன்றாய்வெந்தும்வெளுத்தும் ஜலமானது நன்றாய்க் கருத்தும் இருக்குஞ் சமயத்தில் அடுப்பை விட்டிறக்கி வடிகட்ட வேண்டும். வடிகட்டின கஷாயத்தில் - 13 - பலம் பூண்டிதழ்களைப் போட்டு அடுப்பேற்றி வேகவைத்து நன்றாய்வெந்து அழிந்துபோன பதத்தில் சுமார் இருபத்தைந்து பலம் எருமைப்பாலை அதில் விட்டுக் காய்ச்சவேண்டும். பாலெல்லாஞ் சுண்டினபின்பு ஆறுபலம் பசுவினெய்யை யதில்விட்டு நன்றாய்க் கிளறிவர எல்லாம் பால் கவ்வா மாதிரி ஆகிவிடும். அதனை யெடுத்துத் தாம்பிர பாத்திரத்திற் போட்டு மரமத்தால் நன்றாகக் கடைந்து திரமான தேன் பலம்-௨௪, இதனை அதில்விட்டு மறுபடியும் அடுப்பேற்றிச் சிறுதீயா யெரித்து லேகிய பதமான சமயத்திற் கீழிறக்கிக் கீழ்க்காணும் சரக்குகளைச் சேர்க்கவேண்டும்.

வெள்ளைத் தூதரிவிதைச் சூரணம் விராகனெடை-௧௨, கருஞ்சீரகச் சூரணம் விராகனெடை-௧௨, சிற்றரத்தைச் சூரணம் விராகனெடை-௧௨, இலவங்கப்பட்டைச் சூரணம் விராகனெடை-௧௨, மிளகுச்சூர

ணம் விராகனெடை-௧௨. அரிசித்திப்பிலிச் சூரணம் விராகனெடை-௯.

இவை யெல்லாவற்றையு மொன்ருகக் கலந்து முன் சித்தப்படுத்தி வைத்திருப்பதில் சிறுகச் சிறுகத் தூவி நன்ருகக் கடைந்து நெய்ப்பசையான பாத்திரத்தில் வைத்துக் கொள்ளவும்.

பிரமாணம்:—விராகனெடை-௫, காலையில் ஒரு வேளை மாத்திரம் சாப்பிடவேண்டும்.

உபயோகம்:—எல்லாவகை மூலரோகங்களும் தீரும். மூலரோகத்தா லுண்டான தேக துர்ப்பலம், அசதி, சோர்வு முதலியவைகள் நீங்கித் தேகதிடம் தேகபலம் ஆகியவைகளுண்டாகும்.

பத்தியம்:—கடலை ஊறவைத்த ஜலத்தில் அன்ன முதலியவைகளைச் சமைத்து உபயோகிக்க வேண்டியது. வாயு பதார்த்தம், குளிர்ச்சியான பதார்த்தம் ஆகியவைகளை நீக்கவேண்டியது. வியாதி நாட்பட்டதா யிருந்தால் இதனை அதிகநாள் தொடர்ச்சியாக உபயோகித்துவர வேண்டியது. வியாதி ஆரம்பமானதா யிருந்தால் சீக்கிரம் குணமாகிவிடும்.

வேறு.

மிளகாய் பலம்-௧, மணக்கத்தி யரிசி அல்லது, கருங்குறுவை யரிசிமா பலம்-௪, கொப்பரைத் தேங்காய்ப்பால் பலம்-௧, (இதனைத் தோலைச்சீவி யரைத்துப் பால்பிழிந்து மேற்கண்ட எடை நிறுத்தெடுத்துக் கொள்ளவேண்டும்.) பீதரோகணி, ஓரிலைத் தாமரையிலைஇவை வகை-௧-க்கு விராகனெடை-௧௰. (இவ்விரண்டையும் அம்மியில் தனித்தனி மைபோ லரைத்துக் கொள்ளவேண்டும்) பசுவினெய் பலம்-௨௰.

செய்முறை:—மேற்படி மாவை ஒரு புதுமண் சட்டியிற்போட்டு அரைப்படி ஜலத்தைவார்த்து ஓரிரவு ஊறவைத்து மறுநாட் காலையில் செம்மையாய்க் கரைத்துத் தனியே வைத்துக்கொள்ள வேண்டும். மிளகாயைப் புதுச் சட்டியிலிட்டு அடுப்பேற்றிச் சிறுதீயா யெரித்து அரைவாசி வறுபட்ட பின்பு முன்பு கரைத்து வைத்திருக்கும் மாவின் ஜலத்தைச் சிறுகச் சிறுகத் தெளித்து வறுத்து மிளகாயெல்லாம் எரிந்து வெண்ணிறமாகிய பஸ்பமான சமபத்தில் மேற்படிதேங்காய்ப்பாலை விட்டுப் பிறகு முன்னரைத்து வைத்திருக்கு மருந்துகளையுஞ் சேர்த்து நன்ருய்க்கிளறி நெய்யையும் விட்டு மத்தாற்கடைந்து லேகியபதத்தில் எடுத்துப் பீங்கான் பாத்திரத்தில் வைத்துக் கொள்ளவும்.

பிரமாணம்:—விராகனெடை-௰. ௧. காலைமாலை யிரண்டுவேளையும் உபயோகிக்கலாம்.

பத்தியம்:—வியாதி பலமாயிருந்து தேகபலமுமிருந்தால், உப்பு, புளி முதலியவைகளை நீக்கி கடும்பத்தியம் வைத்தால் வெகுசீக்கிரம் வியாதி குணப்படும். இந்தப் பிரயோகம் பெரும்பான்மையும் பலசாலிகளுக்கே உபயோகப்படும். சுகுமார தேகிகளுக்கு விசேமா யுபயோகப்படாது. அவர்களுக்கும் உபயோகிக்க ஆவசியகமானுல் இலகுவான பதியமாக வைக்கவேண்டியது.

உபயோகம்:—வாதசம்பந்த மூலரோகம், வறள் மூலரோகம முதலிய மூலரோகங்கள் தீரும்.

குறிப்பு.

மிளகாயானது மூலரோகிகளுக்குக் கூடாத வஸ்துவா யிருந்தும் அந்த வஸ்துவினுலேயே அந்த ரோகத்திற்கு முறை யேற்பட்டிருப்பது பெரியோர்களின் புத்தி நுட்பத்தையும், கடவுளின் அற்புத மகிமையையும் விளக்குகின்றது. இந்த மூலரோகத்திற்கு மிளகாய் சம்பந்தமான வேருெரு முறையும் முன்சொல்லப்பட் டிருக்கிறது.

வேறு.

சாட்டரணைவேர் பலம்-௧, மிளகு, வெங்காயம், கருவேப்பிலை, சீரகம், புளி இவை செல்லத்தக்க அளவு, பசுவினெய் பலம்-௰.

செய்முறை:— மேற்படி வேரைச் சிறுதுண்டுகளாகத் துண்டித்து ஜலத்திற்போட்டு இரண்டுமூன்று தடவை யலம்பிக் கழுவிச் சுத்திசெய்து வேறுபாத்திரத்திற் போட்டுக் கொஞ்சம் ஜலத்தைவிட்டு வேகவைத்து நன்ருய் அழிய வெந்தபின்பு மத்தாற்கடைந்து அதிலுள்ள திப்பிநீக்கி விட்டு மற்ற சம்பாரங்களையும் தேவையான அளவு அரைத்துச்சேர்த்து அரை அல்லது முக்கால் ஆழாக்கு ஜலம்விட்டுக் கரைத்துக் கொள்ளவும். நெய்யைச் சட்டியில் வார்த்து அடுப்பேற்றிச் செம்மையாகச் சூடுகண்டபின்பு ஒருபலம் வெங்காயத்தை மெல்லியதாக அரிந்து ஏழுதடவை ஜலத்திற் கழுவி மேற்படி நெய்யிற்போட்டு வறுக்கவேண்டும். சிவந்த வர்ணமான பதத்தில் முன் சித்தப்படுத்தி வைத்திருப்பதை அதில்விட்டு மறுபாத்திரத்தால் மூடி வைக்கவேண்டும். மூன்று நான்குகொதி வந்தபின்பு கீழிறக்கி ஆறவிட்டு இளஞ்சூட்டுடன் காலையில் சுமார் அரைப்பலம் சாப்பிடவேண்டும். சாதம் சமைத்துச் சுடுசாதத்துடனும் இரண்டுமூன்றுபலம் சாப்பிட

வேண்டும். இவ்விதம் தினமொன்றிற்குக் காலையில் ஒருவேளை விதமாக இருபதுநாள் உபயோகித்து வந்தால் சீழ்மூலம் குணமாகிவிடும் ஒருவாரம் பத்துநாளைக்குள்ளாகவே இதன் குணம்தெரியும். வியாதி நாட்பட்டதாகவும், கஷ்டமானதாகவு மிருந்தால் ஆரம்பத்தில் இருபதுநாளுபயோகித்து இடையிற் பத்துஅல்லது, பதினைந்து நாள்விட்டு மறுபடியும் இருபதுநாளுபயோகிக்க வேண்டும். இவ்விதம் வியாதியின் பலத்திற்குத் தகுந்தபடி இரண்டுமூன்று தடவைகள் விட்டுவிட்டு உபயோகிக்கின் எவ்வித நாள்பட்ட சீழ்மூல ரோகமுந் தீரும்.

(இன்னும் வரும்)

## சுகாதார போதினி.

௪-ம் பிரிவு.

### இரசவாதம்.

முன்தொடர்ச்சி (Vol-௫. பக்கம் 112)

மேற்கண்ட விதமாக சர்வ ஜாக்கிரதையுடன் இருந்தும் வெள்ளியானது குறைய நேரிட்டால் அப்போது அதன் காரணத்தை நிதானித்து அறியவேண்டியது ஆவசியகம். ஏனெனில், வெள்ளியானது எரிந்துபோகிற வஸ்துவல்ல. மேற்கண்ட விதமாகக் கெந்தகத்தின் கெடுதியில்லாம லிருந்தால் அதை உருக்கின கும்மட்டியில் கீழே சிந்திப்போ யிருக்கவேண்டும். (இவ்விதம் நமது அனுபவத்தில் பலதடவை கண்டிருக்கின்றோம்) ஆகையால் மேற்கண்டபடி வெள்ளியானதுவைத்த எடைக்குக் குறைவாயிருந்தால் கெந்தகத்தின் கெடுதியா? அல்லது, கும்மட்டியில் சிந்திப்போயிருக்கிறதாவென யூகித்து நிதானித்தறிய வேண்டியது. "மந்திரங்கால் மதிமுக்கால்" என்னும் ஆன்றோர் வாக்கியத்திற்கொக்க இந்த விஷயங்களிலெல்லாம் யூகித்தறிதலே பிரதானமானது.

முதற் றடவையில் வெள்ளியானது பொன் வர்ணமாகி விடவேண்டும், (இவ்விதம் அனுபவத்தில் பலதடவை காணப்பட்டிருக்கிறது) இவ்விதம் சிவப்புச்சாயலான மஞ்சள் வர்ணமாகா விட்டால் இரண்டாந்தடவையும் தாம்பிரக் களங்கத்தைச் சேர்த்து உருக்கி ஊதி வர்ணமேற்ற வேண்டும். அப்படிச் செய்யாவிட்டால் பொன்னானது நல்ல வர்ணமுள்ளதாக விராது. சிலசமயம் எட்டுத் தடவை மடக்கிமடக்கிச் சேர்த்துருக்கித் தாம்பிர வருணமாக்கப்பட்டிருக்கிறது. சேர்மானத்திலும் சிரேஷ்டமானதாகக் காணப்பட்டிருக்கிறது. ஆகையால், இதன் நிதானத்தையும் அனுபவத்தினால் யூகித்தறிந்து கொள்ளவேண்டும். ஏனெனில், சிலசமயம் ஒரேதடவையில் வர்ணமேறிப் போவதும் பலதடவையில் வர்ணமேறிப் போவதும் அனுபவத்தால் நிச்சயிக்கப் பட்டிருப்பதே காரணம்.

வெள்ளிக்குச் செம்மையாக வருணமேறாத மட்டத்தைப் பூதக்கண்ணாடியால் பரிக்ஷித்தபோது வெள்ளிமுழுவதும் வருணமேறாமல் சிறிதிடங்களில் வருணமாகியும், சிலதிடத்தில வருணமேறாமல் வெள்ளையாயு மிருந்தது. இதனைத் தங்கத்தோடு சேர்த்தபோது அதிகங் குறைந்த மாற்றுள்ள பொன்னானது. ஆகையால், வெள்ளியைப் பூரணமாக வருணமேற்றியே பொன்னோடுசேர்க்க வேண்டியது. இந்த விஷயத்தில் அதிக புத்திநுட்பமும் அதிக யூகமும் வேண்டியது. இந்த மர்மத்தைபறியாத அநேகர் வீணே யேமாந்து ஏங்குகின்றார்கள். இந்த விஷயத்தைக் கவனித்துச் செய்பவர்கள் ஒருபோதும் நஷ்டமடையார்கள். இந்தவிஷயத்தைக் கவனியாதவர்கள் அவசியம் நஷ்டமடைவார்கள்.

### வருணமேற்றிய வெள்ளியைப் பக்குவப்படுத்தும் வகை.

மேற்கண்ட விதமாகத் தாம்பிரக்களங்கத்தை அல்லது தாம்பிரத்தைச்சேர்த்து வருணமேற்றிய வெள்ளியை அன்னபேதி ஜலத்தில் உருக்கிச் சாய்க்கவேண்டும். (ஒருபலம் அன்னபேதியைப் பொடித்து ஐந்துபலம் ஜலத்திற்கரைத்து எடுத்துக்கொள்வதே அன்னபேதி ஜலமாம்) இவ்விதம் சாய்த்தால் வெள்ளியில் அயச்சத்துச்சேர்ந்து தங்கி விடுகிறது. ஆகையால், அதனை மறுபடியுருக்கும்போது உப்பிவிடுகிறது அல்லது, கொப்பளித்து விடுகிறது. ஆகையால் மடக்கிமடக்கி நான்கைந்து தடவை யுருக்கிச் சாய்க்க நேரிடுகிறது. இப்படி மடக்கி மடக்கி யுருக்கிச் சாய்த்தால் உப்பாமலும் கொப்பளிக்காமலும் இருப்பதுடன் நல்ல ஊட்டமும் உண்டாகி விடுகிறது. ஆகையால் வருணமேற்றிய வெள்ளியை மேற்கண்ட விதமாகப் பக்குவப்படுத்திக் கொள்ளவேண்டியதும் முக்கியமான விஷயம்.

### குறிப்பு.

நல்ல பொன்னானது அதனை யுருக்கினால் அது ஒருபோதும் உப்பாது அல்லது கொப்பளிக்காது. ஆ

கையால் சரியான பக்குவம்வரும் வரையில் மடக்கி மடக்கி யுருக்கவேண்டியதுதான் பிரதானம்.

இன்னும் நாம் முன்சொல்லி யிருப்பதுபோல் பொன்னை யுருக்கினால் மேற்பக்கம் உருண்டைவடிவமாகவும், மீன்முதுகைப் போன்று மிருக்கும். வெள்ளியையுருக்கினால் தட்டையாகவுஞ் சமமாகவுமிருக்கும். வருணமேற்றின வெள்ளியானாலும் சரியே வேறு மருந்து கொடுக்கப்பட்ட எவ்வித மட்டமானாலுஞ் சரியே அதையுருக்கினால் மேற்பக்கம் உருண்டையாகவும் மீன் முதுகைப்போன்று மிராதவரையில் அதனோடு தங்கத்தைச்சேர்க்க முயலலாகாது இந்த இலட்சணமுண்டானால்தான் சரியான மட்டமென நிதானித்து, மறுபடி அதனோடு தாயைச்சேர்க்க வேண்டும். இதற்காகவும் அடிக்கடி யதனை மடக்கி மடக்கி யுருக்கவேண்டியது தான் முறை. அவசரப்பட்டுத் தாயைச்சேர்ப்பதினால் குறைந்த மாற்றுள்ள பொன்னாதும். அதனால் நஷ்டத்திற் கேதுவாகுமே யொழிய இலாபத்திற்கேதுவிராது. இவ்வித விஷயங்களை யெல்லாம் கவனியாது அநேகர் இரசவாதத்தில் அநேகமாயிரம் ரூபாயை வீணாய்ச் செலவுசெய்து முடிவில்லொன்றும் பிரயோசன மடையாமல் இரசவாதம் பொய்யென்றே சாதித்துத் திரிகின்றார்கள். புத்தி நுட்பத்தினால் தாங்களேயாவது, அல்லது அனுபவசாலிகளான ஆசான்கள் மூலமாகவாவது கிரமப்படி செய்வார்களாயின் எவ்விதத்திலும் நஷ்டமடைவதற் கேதுவிராது.

இன்னும் வரும்.

---

## சுகாதார போதினி

எ-ம் பிரிவு.

### பற்ப முறைகள்.

முன்தொடர்ச்சி (Vol. 3. பக்கம்-112)

### தாம்பிரபற்பம் (வேறு.)

சேராங் கொட்டைக் கொம்பு இரண்டடிநீளம் (இதனை ஆக்கரினால் மூக்காற்பங்குவரை துவாரமிட்டு வைத்துக்கொள்ள வேண்டும்) மேற்படி கொம்பானது சுமார் நான்கு, அல்லது, ஐந்து அங்குல கனமுள்ளதாக இருக்கவேண்டும். சுத்திசெய்த சுமார் இருபத்தைந்து, அல்லது, முப்பது தாம்பிரசல்லிகளை அடைத்து முன் ஏக்கையைவைத்துச் செம்மையாகக் கெட்டித்து மேற்படி சேராங்கொட்டை ஆப்பைவைத்தடித்து ஏழு சீலைமண்செய்து உலர்த்தி கெஜபுடமிடவேண்டும். புடம் ஆறினபின்னெடுக்கக் கடவுளினது கிருபையால் வெண்ணிறமான பற்பமாகியிருக்கும்.

### குறிப்பு.

மேற்கண்ட சல்லிகளில்லாத சமயத்தில் தாம்பிரத்தைச் சுத்திசெய்து தகடடித்துச் சல்லியைப்போற் கத்தரித்துக்கொள்ளலாம். சிறு துண்டுகளாகத் தரித்தும் சேர்த்துக்கொள்ளலாம்.

பிரமாணம்:—அரைக்குன்றிமணிமுதல், ஒருகுன்றிமணியெடை வரையில்.

அனுபானமும், உபயோகமும்:—இலவங்கப்பட்டைச்சூரணம் குன்றிமணியெடை-௪, தேன் விராகனெடை-௩. இவ்விரண்டையு மிஸ்ரமித்து மேற்கண்ட பற்பத்தைப் பிரமாணப்படி யனுபானித்துண்ண, மூர்ச்சைரோகம், பிரமியரோகம், கபரோகம் ஆகியவைகள் தீரும்.

ஓமச்சூரணம் குன்றிமணியெடை-௪, தேன் விராகனெடை-௩. இவ்விரண்டையு மிஸ்ரமித்து மேற்கண்ட பற்பத்தைப் பிரமாணப்படி யனுபானித் துண்ண மந்தாக்கினிரோகம், அஜீரணரோகம் ஆகியவைகள் தீரும்.

வெங்காயவேர்ச் சூரணம் விராகனெடை-௨, நெய் விராகனெடை-௩. இவ்விரண்டையு மிஸ்ரமித்து மேற்கண்ட பற்பத்தைப் பிரமாணப்படி யனுபானித் துண்ண, காக்கைவலி, முயல்வலி முதலிய வலிப்பு ரோகங்கள் தீரும்.

மஞ்சட் கடுக்காய்த்தோற் சூரணம், தான்றிக்காய்த்தோற் சூரணம், நெல்லிவற்றற் சூரணம் இவைவகை-௧-க்கு குன்றிமணியெடை-௰, தேன் விராகனெடை-௩. இவை யெல்லாவற்றையு மிஸ்ரமித்து மேற்கண்ட பற்பத்தைப் பிரமாணப்படி யனுபானித்துண்ணப் பறங்கிப்புண், வெண்குஷ்டம் ஆகியவைகள் தீரும்.

மாதுளம்பழ ரசம், இஞ்சிரசம் இவை வகை-௧-க்கு விராகனெடை-௧, தேன் விராகனெடை-௩. இவ்விரண்டையு மிஸ்ரமித்து மேற்கண்ட பற்பத்தைப் பிரமாணப்படி யனுபானித்துண்ண, பித்தரோகம், உதரரோகம், வாதமூலரோகம், சங்கிரஹணி, சூதகக்கட்டு ஆகியவைகள் தீரும்.

இன்னும் வரும்.